கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 18/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைமதி | வயது | 42 |
| கணவர் பெயர் | முருகேசன் | ஜாதி | |
| தொழில் | மகளிர் சுய உதவி குழு | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூரில் மகளிர் சுய உதவி குழு வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள். அசா.1 எனது கணவர் ஆவார். எங்களுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் 10 வருடத்திற்கு மேலாக இடப்பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 12.05.2023 ம் தேதி எனது கணவர் 100 நாள் வேலைக்கு சென்று விட்டு வரும்போது 02.45 மணியளவில் ஆஜர் எதிரிகள் என் கணவரை தேவடியா, குச்சிகாரி மகனே என தகாத வார்த்தைகள் என திட்டி, அருகில் இருந்த கல்லை எடுத்து 3 வது எதிரி கீர்த்திகா பின் பக்க தலையில் புறடி பகுதியில் குத்தியதில் இரத்தம் கொட்டியது. 1 மற்றும் 2 வது எதிரிகள் கையால் என் கணவரை அடித்தார்கள். 1 வது எதிரி கல்லை தூக்கி என கணவர் தலையில் போட்டு கொன்று விடுவேன் என்று மிரட்டினார். பின்னர் என் கணவரை சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை எந்த தேதியில் மருத்துவமனியல் விசாரணை செய்தார்கள் என்றால் 13.05.2023 ம் விசாரணை செய்தார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 வகுப்பு வரை படித்துள்ளேன். 13.05.2023 ம் தேதிக்கு பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனையில் யார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் வைப்பூரில் இருந்து ஆண் போலீஸ் ஒருவர் என்னை விசாரணை செய்தார். எனக்கு ஞாபகம் மறதி இருக்கிறதா என்றால் இல்லை.

அன்றைய தினம் மகளிர் சுய உதவி குழு வேலைக்காக சென்றிருந்தேனா என்றால் சென்று விட்டு காலை 10.30 மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்து விட்டேன். நான் அன்றைய தினம் 100 நாள் வேலைக்கு சென்றிருந்தேனா என்றால் இல்லை. ஆனால் 100 நாள் வேலை பார்ப்பதற்கு அடையாள அட்டை என்னிடம் உள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தபோது 3 வது எதிரி தான் எனது கணவரை கல்லால் அடித்தார் என்று தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அன்றைய தினம் எனது கணவர் 100 நாள் வேலைக்கு சென்றிருந்தார் என்றால் சரிதான். 100 நாள் வேலையின் போது கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும், கடந்த 10 ஆண்டுகளாக எங்களுக்கும், எதிரிக்கும் இருந்த முன்விரோதத்தின் காரணமாக எனது கணவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 18/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி மோகன் | வயது | 41 |
| தந்தை பெயர் | மாசிலாமணி | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | பழையவலம் | தாலுக்கா | |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பழையவலம் என்ற ஊரில் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது பக்கத்து தெருக்காரர். ஆஜர் எதிரிகள் என்னுடைய ஊர்க்காரர்கள். அசா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 12.05.2023 ந் தேதி 02.45 மணியளவில் அசா.1 100 நாள் வேலைக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது இடப்பிரச்சனை காரணமாக ஆஜர் எதிரிகள் அசா.1 ஐ தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி, கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும், போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

இல்லை.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 18/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அழகி | வயது | 55 |
| கணவர் பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | பழையவலம் | தாலுக்கா | |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பழையவலம் என்ற ஊரில் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள். அசா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 12.05.2023 ந் தேதி 02.45 மணியளவில் அசா.1 100 நாள் வேலைக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது இடப்பிரச்சனை காரணமாக ஆஜர் எதிரிகள் அசா.1 ஐ தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி, கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும், போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

இல்லை.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 18/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாதவி | வயது | 36 |
| கணவர் பெயர் | செல்வம் | ஜாதி | |
| தொழில் | வீட்டு குடித்தனம் | மதம் | |
| ஊர் | பழையவலம் | தாலுக்கா | |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பழையவலம் என்ற ஊரில் வீட்டுக்குடுத்தனம் செய்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள். அசா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 12.05.2023 ந் தேதி 02.45 மணியளவில் அசா.1 100 நாள் வேலைக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது இடப்பிரச்சனை காரணமாக ஆஜர் எதிரிகள் அசா.1 ஐ தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி, கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அதனை நான் கேள்விப்பட்டேன் என்றும், போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

இல்லை.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 18/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 6 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காசிநாதன் | வயது | 60 |
| தந்தை பெயர் | முனியப்பன் | ஜாதி | |
| தொழில் | கொத்தனார் | மதம் | |
| ஊர் | பழையவலம் | தாலுக்கா | |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பழையவலம் என்ற ஊரில் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள். அசா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்யதார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 12.05.2023 ந் தேதி 02.45 மணியளவில் அசா.1 100 நாள் வேலைக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது இடப்பிரச்சனை காரணமாக ஆஜர் எதிரிகள் அசா.1 ஐ தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி, கல்லால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தது சம்பந்தமாக மறுநாள் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

இல்லை.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 18/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 7 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மலர்மகள் | வயது | 60 |
| கணவர் பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | பழையவலம் | தாலுக்கா | |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பழையவலம் என்ற ஊரில் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள். அசா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடைய தான். சம்பவ நடந்த தினத்திற்கு மறுநாள் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் மகசர் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். (**பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரணை செய்யதார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதி இருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.